IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.858/2009

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாஸ்கரன் | Caste | : | |
| Father Name | : | ஆறுமுக முதலியார் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th day of November, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

அசல் வழக்கு.99/1953 என்ற வழக்கில் 3 ஆம் பிரதிவாதியாக இருந்த அப்துல்லா பாஷா அவருக்கு வந்திருக்கக் கூடிய சொத்தானது மேற்கண்ட வழக்கின் தீர்ப்பின் நகல் என்பது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 PW1 மூலம் குறியீடு செய்யப்படுகிறது. 99/1953 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வழக்கில் வந்திருக்கூடிய சொத்தில் இந்த வழக்கின் சர்வே நம்பர் குறித்து எதுவும் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் 3 ஆம் பிரதிவாதியாக இருந்த அப்துல்லா பாஷாவைப் பற்றி அவர் தரப்பினராக இருந்தாரா என்பது பற்றி மாற்றி கூறுகிறார். மேற்கண்ட வழக்கின் அறிக்கையைப் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட வழக்கு 99/1953 என்ற வழக்கில் அப்துல்லா பாஷா இடைக்கால மனுவான 1313/1954 என்ற மனுவில் சுவாதீனத்தை கேட்கும் பொழுது இந்த மனுவில் இருந்த சர்வே எண் மேற்கண்ட மனுவில் இருக்கிறதா என்றால் இல்லை. இடைக்காக மனுவான 1313/1954 என்ற மனுவில் இவ்வழக்கின் சொத்தின் சர்வே நம்பர் இருந்திருந்தால் மட்டு மே அவர் கிரையம் செய்தது செல்லும் என்று சொன்னால் அவருக்கு உரிமை இருந்ததாக கிரையம் செய்தார். அவருக்கு உரிமை இருந்ததா என்றால் இருந்தது. IA

No.1313/1954 ன் படி உரிமை இருந்ததா என்றால் உரிமை இருந்தது. 99/1953 என்ற வழக்கானது அஜீஸ் சாகிப் என்பவருடைய வாரிசுகளுக்கு இடையில் நடந்த பாகப் பிரிவினை வழக்கு என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் அஜீஸ் சாகிப் சொத்துக்களை தான் அவருடைய வாரிசுகளுக்கு பாகப் பிரிவினை நடந்தது என்று சொன்னால் சரிதான். அஜீஸ் சாகிப் பெயரில் தான் இந்த வழக்கு சொத்து சர்வே எண்ணான 25/1, 25/2 என்ற சர்வே எண்ணானது பாகப் பிரிவினைக்கு முன்பு இருந்தது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது சர்வே எண்.25/1 , 25/2 என்ற சொத்தானது அஜீஸ் சாகிப் என்பவர் பெயரில் இருந்த சிட்டா என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணமானது Ex.B.2 வாக PW1 மூலம் குறியீடு செய்யப்படுகிறது. (மேற்கண்ட கேள்விக்கு வாதி தரப்பில் சிட்டாவிற்கு உண்டான Authorization Person மேற்கண்ட சாட்சி இல்லை என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது.) அசல் வழக்கு 909/2009 என்ற வழக்கில் முகமத் ஏஞ்சாஸ் என்பவர் தான் வாதி என்று சொன்னாலும் அவர் இந்த வழக்கில் அதாவது 858/2009 பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு 414/2008 என்ற வழக்கானது வேலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபபட்டு பிறகு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட அசல் வழக்கு 909/2009 என்ற வழக்கு என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சொத்து குறித்து வட்டாட்சியருக்கு ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டு மேற்கண்ட அறிவிப்பிற்கு வட்டாட்சியரால் ஒரு பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(Sd/-)..K.Inbarani

DISTRICT MUNSIF
KATPADI